بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து∴பா**

**15 June 2018 (30 Ramadan 1439 A H)**

# "SOME ADVICES FOR THE FASTERS"

## "நோன்பு நோற்பவர்களுக்கான சில அறிவுரைகள"



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவதும், அல்∴பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

ரமலான் மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமையான இன்று நான் உங்கள் அனைவருக்கும் சில அறிவுரைகளை வழங்குகின்றேன். இதை நீங்கள் பின்பற்றிக் கொள்வீர்களாகயிருந்தால் இந்த ரமலானின் நாட்கள் உங்களுக்கு வீணாகாமலிருக்கும். அதாவது இந்த அருளுக்குரிய மாதத்தின் போது உருவாக்கப்பட்ட நல்லபழக்கம் என்றென்றும் வலுவாக நிலைநிற்கும். முதலாவதாக ஜுமா தொழுகைக்கு பின்னர் இரண்டு ரக்காத் நபில் தொழுகையை செய்ய வேண்டும். முதல் ரக்காத்தில் சூர: அல்பாத்திஹாவுக்கு பின்னர் சூர: அல் இஹ்லாஸ் 10 முறை ஓத வேண்டும். இரண்டாவது ரக்காத்தில் சூர: அல் பாத்திஹாவுக்கு பின்னர் சூர: அல்காபிறூன மூன்று முறை ஓதுங்கள். தொழுகைக்கு பின்னர் நபி(ஸல்) அவர்களின் மீது சலாத் 10 முறை கூறுங்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் நோன்பு நோற்பவரின் பிரார்த்தனை ஒருபோதும் நிராகரிக்கப்பட மாட்டாது. ஏனெனில் நோன்பு நோற்பவரின் இதயம் மனந்திரும்புதலின் பாதையில் உள்ளது. உண்மையில் அந்நிலையில் அவர் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைந்தவாறும் மற்றும் அவனுக்கு கீழ்ப்படிந்தவாறும் இருப்பார். அல்லாஹ்வின் மீதான பயபக்தி காரணமாகவே உணவு மற்றும் பானங்களை அவர் தவிர்த்துக் கொண்டார். அல்லாஹ் அவரது அரசனாகயிருக்கின்றான். அவரது பாதுகாவலனாகயிருக்கின்றான். அவரது பரமதிகாரியாகயிருக்கின்றான். வானங்களையும் பூமியையும் படைத்த அந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு கீழ்படிந்த நிலையிலேயே தனது விருப்பங்களை அவர் கைவிட்டார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார். பிரார்த்தனை என்பது ஒரு இறைவழிபாடு ஆகும். எனவே நீங்கள் அல்லாஹ்வின் இரக்கத்தை தேடும் ஒரு ஊழியரைப் பார்த்தால், அவர் நீண்ட நேரமாக பிரார்த்தனையில் மூழ்கியிருப்பதாக நீங்கள் கண்டு கொண்டால், அவர் அல்லாஹ்விடம் மிக நெருக்கமாக இருக்கின்றார் என்றும் தனது அனைத்து சுமைகளையும் அவர் தன்னை படைத்தவனிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும் நீங்கள் உணர்ந்துக் கொள்ளுங்கள். நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் ஒரு முறை வினவினர். அல்லாஹ்வின் தூதரே! நம் இறைவன் நம் அருகில் இருக்கின்றான் என்றால் அவனிடம் இரகசியமாக பேசி கொள்ளலாமே? அல்லது அவன் வெகு தூரம் தொலைவாக இருக்கின்றான் என்றால், நாம் அவனை மிக சத்தமாக அழைத்து பிரார்த்தனை செய்ய வேண்டுமல்லவா? அதை தொடர்ந்து அல்லாஹ் இவ்வசனத்தை வெளிப்பாடாக இறக்கினான்.

**“என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன். பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு நான் விடையளிக்கின்றேன்” (2:187)**

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்.

செவிடனாகிய ஒருவனை அழைப்பது போன்று நீங்கள் இறைவனை அழைக்காதீர்கள். அல்லது இடத்தில் இல்லாமலிருக்கும் ஒருவனை அழைப்பது போன்றும் நீங்கள் இறைவனை அழைக்காதீர்கள். நிச்சயமாக இறைவன் எல்லாம் காண்பவனாகவும் அனைத்தும் கேட்பவனாகவும் இருக்கின்றான். நீங்கள் எவர் ஒருவனை அழைத்து பிரார்த்தனை செய்கின்றீர்களோ அவன் உங்களின் சமீபத்தில் தான் இருக்கின்றான். அல்லாஹ் நம்மிடம் கூறுவதாவது அவனிடம் கேட்பதற்காகும். அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்.

**“உங்களுடைய இறைவனிடம் பணிவாகவும் அந்தரங்கமாகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.” (7 : 56)**

இன்னொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான் **“என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள். நான் உங்கள் பிரார்த்தனைக்கு பதிலளிக்கிறேன்.” (40 : 61)**

நாம் இந்த அருளுக்குரிய ரமலான் மாதத்தின் இறுதி நாளினை வேதனையுடனும் வருத்தத்துடனும் காண்பதோடு மனந்திரும்புதலுடனும் காண்கிறோம். ஆனால் நாம் தற்பொழுது அல்லாஹ்வுக்கு நன்றியினை செலுத்த வேண்டும். ஏனெனில் இவ்வாண்டு நாம் ரமலான் மாதத்தினைக் கண்டுள்ளோம். மேலும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்றுமட்டுமல்லாமல் அதற்கு ஒரு சாட்சியாக இருக்கும் பாக்கியத்தினையும் பெற்றுள்ளோம். பிறர் இப்பாக்கியத்தை பெறவில்லை. மற்றவர்கள் இப்பாக்கியத்தை பெறாமல் நம்மை விட்டு விலகி சென்றனர். இக்காரியத்தை குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இந்த அருளுக்குரிய மாதம் நிறைவடைவதற்கு முன்னவே அவர்கள் நம்மிடமிருந்து அகன்று சென்றனர். அதைப் போன்றே அருளுக்குரிய இம்மாதத்தின் முதல் கட்டத்தில் நம்மிடம் இருந்தவர்களும் நம்மை விட்டு விலகி விட்டனர்.

ரமலான் மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமையில் நாம், நம் எதிர்பார்ப்புகளை இழந்தவர்களாகிவிடக்கூடாது. நாம் நம்முடய கட்டுபாடுகளுக்கு அப்பாற்பட்ட காரியங்களைக் குறித்த சிந்தனையினால் நேரத்தை வீணாக்கிக் கொள்ளல் கூடாது. அத்தகைய காரியங்களுக்கு முக்கியத்துவம் இல்லை. ரமலான் முடிந்துவிட்டது என்று நாம் மன அமைதிக் கொண்டு மகிழ்ச்சி அடையக்கூடாது. ஏனெனில் இது மீண்டும் நம்மை கடந்த கால பாவங்களுக்கு நேராக கொண்டு சென்று விடும். அப்படியென்றால் இந்த ரமலான் மாதமானது உங்கள் வாழ்க்கை நிலைகளில் எத்தகு மாறுதலினை தந்திருக்கும்.?

ரமலான் கடந்து செல்கிறது. மேலும் மற்றொரு ரமலான் வருகிறது. இத்தகு அருளுக்குரிய மாதத்தினில் மட்டும் நம்முடைய செயல்பாடுகள் இறைவணக்கத்தோடும் வழிபாடுகளோடும் அதாவது நோன்பு நோற்தல், ஜக்காத் வழங்குதல், தொழுகை கூடங்களுக்கு செல்லுதல், ஒழுங்கான முறைகளில் தொழுகைகளை கடைப்பிடித்தல் முதலான நற்செயல்களோடு நெருங்கிக் காணப்படுகிறோம். ஆனால் ரமலான் நிறைவடைந்தப் பின்னர் நாம் இந்நிலைகளிலிருந்து, தடம் புரண்டவர்களாக நம்முடைய பழமை நிலையினுக்கு திரும்பிக் கொள்கிறோம். அத்துடன் இழிவான செயல்களிலும் பாவங்களிலும் நம்மை மீண்டும் ஈடுபடுத்திக்கொள்கிறோம். வேறு நிலையில் கூறுவோமேயானால், உங்கள் வாழ்க்கையினில் ஒரு மாறுதலை ஏற்படுத்தி அதாவது நன்முறைப்படுத்திசெயல்ப்பட்டீர்கள். ஆனால் ரமலான் முடிந்தபின், உங்கள் கடந்த கால நிலைக்குள் புகுந்தவர்களாக மேலும் உங்களை, தீய செயல்களுக்குள் உட்படுத்திக் கொண்டீர்கள். மட்டுமல்லாமல் உடலளவிலும், நல்லொழுக்க அளவிலும், ஆன்மீக அளவிலும் சீர்பட்ட நீங்கள் இப்பொழுது அவற்றிற்கான விடைப்பெறுதலைக் கொடுத்து விட்டீர்கள்.

பழைய இழிவான நிலையினில் திரும்ப சென்றவர்கள், உண்மையில் இந்த அருளுக்குரிய மாதத்தின் மதிப்பினை உணராதவர்களாகயிருக்கின்றனர்.அவர் தங்களது ஆன்மீக பயிர்ச்சியில் தோல்வியடைந்தனர். அவர்களுக்கு அளித்த இந்த சொர்கீய வாய்ப்பு என்பது அவர்களுக்காக இந்த அருளுக்குரிய மாதத்தினில் அல்லாஹ் இரக்கப்பட்டு வழங்கியதாகும். அவர்கள் இந்த வாய்ப்பினை இயன்ற வரையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை கவனிக்கவில்லை. அல்லாஹ்வின் பாசத்தை என்றென்றுமாக வலுவாக பற்றிப் பிடிப்பதற்கு இம்மாதத்தினை அவர்கள் பயன்படுத்தவில்லை. ரமலான் மாதத்திற்கு மட்டும் போதுமானதல்ல இத்தகைய நற்செயல்கள் என்ற உண்மையினை அவர்கள் பகுத்தறியவில்லை. ரமலானை சரியான ஆன்மீக பயிற்சிக்களமாக ஒருவர் எண்ணிக்கொண்டிருந்து, அதில் அவர் வெற்றிப்பெற்றும், அம்மாதத்திலிருந்து அவர் பெற்றுக் கொண்ட நல்லியல்புகளை அன்றாட வாழ்வில் நடைமுறைப் படுத்திக்கொண்டும், இறைவணக்கம் மற்றும் இறையெண்ணம் என்பவற்றோடு தொடர்ந்தும் இருப்பாரென்றால், அவருக்கான இரட்சிப்பின் கதவினை இறைவன் நிச்சயமாக திறந்துக் கொடுப்பான். தனது மீதிய வாழ்விற்கான ஆன்மீக புதயலை அவர் பெறுவதற்கான காரணமாவது, அவர் அவர்க்குள்ளாக ஒரு மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு சுயம் ஆளாகிகொள்ளும்பொழுதாகும். எவர் ஒருவர் அல்லாவிடம் நெருங்கியிருக்கின்றாரோ, அந்நேரம் அல்லாவும் அவருடன் நெருங்கிக் கொள்கிறான்.

அல்லாஹ் அவர்களின் அருகாமையில் இருக்கிறான் என்றும் அவனை நோக்கி பிரார்த்தனை செய்பவர்களுக்கு அவன் பதிலளிக்கின்றான் என்றும் அல்லாஹ் கூறியிருப்பதன் அர்த்தமாவது, அவனை தேடுபவர்களுக்கு அவன் அருகாமையில் இருக்கின்றான். அத்துடன், அவரிடம் நீங்கள் கொண்டிருக்கும் நெருக்கம் நிலையானதாக இருக்கும் என்பதுமாகும் இந்நிலையில் அல்லாஹ்விடமிருந்து விலகிநிற்பவர்களுக்கு அல்லாஹ் எந்த அளவிற்கு தொலைதூரத்தில் நிற்கின்றானோ, அவ்வளவிற்கு அவனை நெருங்கியருப்பவர்களுக்கு அவன் அருகாமையிலிருக்கின்றான் என்பதை நீங்கள் உணர்ந்துக் கொள்வீர்கள். அத்துடன் நீங்கள் அல்லாஹ்வை புறக்கணித்தவாகளாகவும் அவனை நினைவு கூறுவதிலிருந்தும் தொழுதுக் கொள்வதிலிருந்தும் உங்கள் முகத்தினைத் திருப்பிக் கொண்டவர்களாகவும் இருந்தால், அல்லாஹ் மிக அருகாமையில் இருக்கின்றான் என்பது ஒரு உண்மை என்றாலும், உங்களிடமிருந்து அவன் நெடிய தொலைவிலிருக்கினறான் என நீங்கள் உணர்ந்து விடுவீர்கள். அவன் உங்களை பார்வையிடுகின்றான், உங்களின் இதயத்திலும் ஆன்மாவிலும் நீங்கள் மறைத்து வைத்திருக்கும் ஒவ்வொரு இரகசியங்களையும் அவன் நன்கு அறிந்தவனாகயிருக்கின்றான்.

ஆகவே பிரார்த்தனைகள் மூலமும், அனுதினம் குர்- ஆன் வாசிப்பதன் மூலமும், இறைவனை நினைவுற்றுவதன் மூலமும், கருணைவாய்ந்த செயல்கள் புரிவதன் மூலமும் நீங்கள் இறைவனிடம் நெருங்கியிருங்கள். ஆன்மீக உயிர்

என்பது ஆன்மீக நீரில் நாம் நீராடுவதன் மூலம் பெறும் ஒன்றாகும். அத்தகு ஆன்மீக நீரில் நாம் நிராடுவோமேயானால், நமது தீமை மற்றும் பாவங்கள் அதாவது பொறாமை, கர்வம், பேராசை, வீணானமோதல் மற்றும் விவாதங்கள் போன்றவை உப்பு கரைவது போன்று அந்நீரில் கரைந்துவிடும்.

நோன்பாளர்களே ! இந்த பரிசுத்தமான ரமலான் மாதத்தில் உங்களால் இயன்றவரையினிலான எல்லா விதமான தியாகங்களையும் நீங்கள் செய்தீர்கள். பசியாலும் தாகத்தாலும் ஏற்பட்ட துயரினை நீங்கள் சகித்துக் கொண்டீர்கள். மட்டுமல்லாது, உங்களை படைத்தவனாகிய அல்லாஹ் உங்கள் மீது தற்காலிமாக ஏற்படுத்திக் கொண்ட நிலையில்லாத தடைகளிலிருந்தும் நீங்கள் விலகி நின்றீர்கள். அல்ஹம்துலில்லாஹ்! இதனைப் போன்று இப்பரிசுத்தமாதமானது, நிறைவுற்ற பின்னரும் உங்களின் நல்லியல்புகளை இழக்காது அதனை தக்கவைத்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்விடம் பொருந்திக் கொள்வதன் வழியாவது, நீங்கள் இறைவழிபாடுகளை மேற்கொள்வதும் இறை எண்ணத்தினில் மூழ்கியிருப்பதும் ஆகும். அல்லாஹ் திருமறையில் கூறியிருப்பதுபோன்று **“நாம் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டோம். அவருக்காக அவருடைய மனைவியை பாகப்படுத்தி, அவருக்கு (ஒரு மகனாக) யஹ்யாவையும் அளித்தோம். நிச்சயமாக அவர்கள் யாவரும் நன்மைகள் செய்வதில் விரைபவர்களாக இருந்தார்கள். இன்னும் அவர்கள் நம்மை ஆசைக் கொண்டும், பயத்தோடும் பிரார்த்தித்தார்கள். மேலும் அவர்கள் நம்மிடம் உள்ளச்சம் கொண்டவர்களாக இருந்தார்கள்” (21 : 91)**

ரமலான் மாதத்திற்கு பிறகும் நாம் நோன்பு நோற்பவரைப் போன்று செயல்பட வேண்டும். நோன்பு நோற்பவராக இருப்பினும் அல்லது நோன்பு நோற்காதவராக இருப்பினும் பரிசுத்த ரமலான் மாதத்தில் புரிந்தது போன்று நன்மை மற்றும் இறைவழிபாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். பிரார்த்தனைகள் மூலம் நாம் பெறும் நற்பலனைப்பற்றிய விழிப்புணர்வுடன் இருப்பதோடு நம் இதயத்தின் வேதனைகளை அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையேனுமாகிய அல்லாஹ்விடம் ஒப்படைக்க வேண்டும். அது மிகவும் நல்லியல்பினைக் கொண்ட காரியமாகும். அல்லாஹ்வின் ஒரு உண்மையான ஊழியர் எந்நேரமும் அல்லாஹ்வை புகழ்ந்தும் மகத்துவப் படுத்தியும் மற்றும் திரு நபியின் மீது சலாத் கூறியவாறும் தனது வாழ்க்கையினை அமைக்க வேண்டும். நம் பிரார்த்தனையினை ஏற்றுக்கொள்ளும் நேரத்தைப் பற்றிய விழிப்புணர்வுடன் நாம் இருக்க வேண்டும். நாம், பிறரின் மீது சாபவார்த்தைகளை கொட்டக் கூடாது. **“முபாஹல”** போன்ற காரியங்களில் இரண்டு பிரிவினர்களுடையவும் பிரார்த்தனை அதாவது அல்லாஹ்வின் பகைவர்களுக்கு எதிராக சாப பிரார்த்தனைகள் செய்யலாம். ஆனால் சாதாரணமான நம் வாழ்க்கையில் இறைவனிடமிருந்து கட்டளைகளைப் பெறாமல் நாம் நம் சகோதரர்களுக்கு எதிராக சாபபிரார்த்தனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் நம் எதிராளிகளாகயிருந்தால் கூட! அதைப் போலவே நாம் நமது இரத்த பந்தம் மற்றும் நட்பினை எக்காரணத்தை கொண்டும் துண்டிக்க கூடாது.

அல்லாஹ்வின் உதவியினால் நாம் தேவையான முயர்ச்சிகளை மேற்கொண்டு ஒரு சிறந்த மனிதராக பரிணமித்திட வேண்டும். நமக்குத் தான் நாம் நன்மைகள் செய்ய வேண்டும். நீங்கள் எதுவொன்று தேடிக் கொண்டாலும் அதனை அல்லாஹ்விடமிருந்தே தேடுங்கள். ஏனெனில் அவன் மட்டுமே பிற உதவியின்றி சுயம் நிலை நிற்பவனாகயிருக்கின்றான். நாம் வறுமையுடையவர்களாவோம் ஆனால் அவனோ பணம் படைத்தவனாயிருக்கின்றான். நாம் பலவீனமானவர்களாவோம். ஆனால் அவனோ பலசாலியாகயிருக்கின்றான். நாம் ஒரு நாள் மரணத்தினை சுவைப்போம். ஆனால் அவனோ ஒருபோதும் அழியாமல் என்றென்றும் வாழ்ந்திருப்பவனாகயிருக்கின்றான்.

ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்.

**“என் இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும் என்னுடைய சந்ததியிலுள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக! எங்கள் இறைவா! என்னையும் என் பெற்றோர்களையும் மு.ஃ.மின்களையும் கேள்வி கணக்குக் கேட்கும் நாளில் மன்னிப்பாயாக”** (14 : 41 42)

ஹஸ்ரத் மூஸா(அலை) அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்.

**“இறைவனே! எனக்காக என் நெஞ்சத்தை நீ உறுதிப்படுத்தி விரிவாக்கித் தருவாயாக! என்காரியத்தை எனக்கு நீ எளிதாக்கியும் வைப்பாயாக! என் சொல்லை அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக! என் குடும்பத்திலிருந்து எனக்கு ஓர் உதவியாளரையும் ஏற்படுத்தித் தருவாயாக! என் சகோதரர் ஹாரூனை அவ்வாறு ஏற்படுத்தி தருவாயாக! என் காரியத்தில் அவரை கூட்டாக்கி வைப்பாயாக! நாங்கள் உன்னை அதிகமதிகம் துதிப்பதற்காகவும் உன்னை அதிகமதிகம் நினைவு கூர்வதற்காகவும் (இவற்றையெல்லாம் அருள்வாயாக!) நிச்சயமாக நீ எங்களை நோக்கியவனாகவே இருக்கிறாய்”** (20 : 26,36)

ஹஸ்ரத் சுலைமான் நபி(அலை) தனது இறைவனிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்.

**“என் இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக! அன்றியும் பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நிச்சயமாக நீயே மிகப் பெருங்கொடையாளியாவாய்” எனக் கூறினார்”** (38 : 36)

1. அல்லாஹ்வுக்கு இபாதத் (இறைவழிபாடுகள்) செய்வதன் மூலமும், அவனிடம் பணிவாக நடந்துக் கொள்வதன் மூலமும், அனைத்து சுமைகளையும் அவனிடம் ஒப்படைப்பதன் மூலமும்தான் நம்

வாழ்க்கையில் அனைத்து காரியங்கள் மற்றும் வெகுமதிகள் நிலை நிற்பது என்ற விழிப்புணர்வுதான் நமது முதல் வெற்றி.

2. நற்செயல்களில் ஈடுபட்டு, தீமைகளை தடுத்துக் கொள்வதன் மூலமாகவே நாம் செய்யும் பிரார்த்தனைகளுக்கு பதில் கிடைப்பது என்ற பகுத்தறிவு தான் இரண்டாவது காரியம். அதற்கான ஆற்றலை அளிக்க அல்லாஹ்வின்றி எந்த ஓர் சக்திக்கும் ஆகாது.

3. நம் அனைத்து விதமான பிரார்த்தனைகளுக்குமுள்ள வெகுமதிகள் அல்லாஹ்விடம் பாதுகாப்பாக இருக்கிறது. அது இவ்வுலகில் வைத்து நிறைவடையாமலிருக்கலாம். ஆனால் நினைவு கொள்ளுங்கள். இதைவிட மேலான மற்றொரு உலகில் வைத்து நமக்கு வழங்குவதற்காக அவன் அதனை மாற்றி வைத்திருக்கின்றான். அது நித்தியமான வாழ்க்கையாகும் நிச்சயமாகவும் அதுவே நமக்கு மிகவும் சிறந்ததுமாகும்

4. அல்லாஹ்விடம் நாம் செய்யும் பிரார்த்தனை அல்லாஹ்வின் மகத்துவத்தின் மீதான நம் நம்பிக்கையினை வெளிப்படுத்துகிறது. நம்பிக்கையுடன் நம் அனைத்து சுமைகளையும் ஒப்படைப்பதற்கு ஏற்றவன் அவன்தான் என்ற திட நிச்சயத்தை அது நமக்குள் வளர்க்கின்றது. அல்லாஹ் அல்லாதவற்றின் மீது அடைக்கலம் கொள்வதிலிருந்தும் பிறரின் உதவியை தேடுவதிலிருந்தும் அது நம்மை தடுத்துக் கொள்கிறது. அது கரணமாக நாம் நமது வேதனைகளை அல்லாஹ்விடம் மட்டும் கூறுகின்றவர்களாக் மாறிவிடுவோம். இதுவே மிக சிறந்த காரியம்.

கீழ்கூறும் தூவாவுடன் என் பிரசங்கத்தை நிறைவாற்றுகின்றேன்.

அல்லாஹ்வே! இவ்வுலகிலும் மறுவுலகிலும் நீ எங்களுக்கு நன்மை செய்வாயாக! நரக நெருப்பிலிருந்து நீ எங்களை பாதுகாப்பாயாக! அல்லாஹ்வே! நீ எங்களுக்கு நேர்வழியினைகாட்டியபின்பு எங்களின் இதயத்தை தவறான வழியில் செலுத்தாதே! உன்னிடமிருந்துள்ள கருணையினை நீ எங்கள் மீது பொழிவாயாக! ஆமீன், சும்ம ஆமீன். யாரப்பல் ஆலமீன்.


**Translated by:**

**Azim Ahmad**
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 7339689239, 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**

**E-M:** jamal.raother@gmail.com
**Blog:** www.sahih-al-islam.blogspot.in
**Phone:** 9447001832, 04752252663